செ.வெ.எண்: 75 நாள்: 26.11.2016

## பத்திரிகைச்செய்தி

இந்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசு அறிவிப்பின்படி, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அனைத்து மக்களும் வங்கி பரிவர்த்தனைகளை முறையாக பயன்படுத்தி கொள்ள ஏதுவாக ஆதார் அட்டை எண்களை வங்கி கணக்குகளில் 100 சதவீதம் இணைக்க சிறப்பு முகாம்கள் அந்தந்த வட்டாட்சியர் அலுவலகத்தில் 28.11.2016 முதல் 02.12.2016 வரை காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை நடத்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த சிறப்பு முகாமில் இதுவரை ஆதார் அட்டை பெறாதவர்கள் புதிதாக ஆதார் அட்டை பெறவும், ஆதார் அட்டை பெற்ற நபர்கள் சேமிப்பு வங்கி கணக்குடன் இணைக்கவும், அதே நாள்களில் வங்கி கணக்குகள் இல்லாத அனைவரும் சேமிப்பு வங்கி கணக்குகள் துவங்கவும், புதிய ரூபே கார்டு பெறவும் அவற்றை செயலாக்கம் செய்திடவும் ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இம்முகாம்களில் கலந்து கொண்டு ஆதார் அட்டை பெறவேண்டிய நபர்கள் குடும்ப அட்டையும், வங்கி கணக்கு துவங்க வரும் நபர்கள் குடும்ப அட்டை, ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை மற்றும் 3 மார்பளவு புகைப்படமும், ஆதார் அட்டையை வங்கி சேமிப்பு கணக்கில் இணைப்பதற்கு ஆதார் நகல் மற்றும் சேமிப்பு கணக்கு நகல் கொண்டு வருமாறு கேட்டு கொள்ளப்படுகிறார்கள். முகாம்களில் கலந்து கொள்ள மகளிர் திட்டம், புதுவாழ்வு திட்டம், வருவாய்துறை அலுவலர்கள் மற்றும் வங்கியாளர்களும் உதவி புரிவார்கள் இந்த அரிய வாய்ப்பினை பொது மக்கள் தவறாது பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**